தனிப்பட்ட வழங்கலுக்காக
தொலை பேசி: 83353
தந்தி: 'எழுசங்கம்'

# எழுச்சி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

676, காலி வீதி, கொழும்பு—3.
"பொங்கு தமிழர்க் கின்னல் விளைந்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு"

குரல் 16 | வள்ளுவராண்டு 2008 | சனவரி—மார்ச் 1977 | ஒலி 3

## அரசியல் மேதை ஜீ. ஜீ. திடீர் மறைவு! தமிழினத்துக்கு மற்றுமோர் இழப்பு!!



தமிழர் நெஞ்சமெலாம் குடிகொண்ட தலைவன், தன் சட்டவாதத் திறமையால் உலகோர் உள்ள மெல்லாம் உறைந்துவிட்ட மேதை, ஈழத்தமிழருக்குப் புகழ் சேர்த்த வல்லாளன், உலகத் தமிழன் ஒற்றுமையைக் காட்ட கலைஞர் கருணாநிதி வழக்கிலும் ஈழத்தமிழினத்தின் ஒற்றுமையை எடுத்தியம்ப தமிழ்த் தலைவர்கட்கெதிரான "ரயல்-அற்-பார்" வழக்கிலும் தோன்றி வாதிட்டு வெற்றி கண்ட பொன்னம்பலம் எனும் பெருந்தகை கடந்த 8-2-77 அன்று மலேசியாவில் உள்ள ஈபோ மருத்துவமனையில் மாரடைப்பால் காலமானார்.

மரணச் செய்தியைக் கேட்ட தமிழ் நெஞ்சங்களெல்லாம் சோகக் கடலில் மூழ்கின, தமிழ் ஈழக்கடைகள், பொது நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு கறுப்

(4-ம் பக்கம் பார்க்க)

### புத்தெழில் தரும் புதிய

# தலைமைச் செயலகக் கட்டட வேலைகள் ஆரம்பம்


## நாவலர் அ. அமிர்தலிங்கம் தொடக்கி வைத்தார்!

இரண்டு மாடிகளைக்கொண்ட சங்கத்தின் தலைமைச் செயலகக் கட்டட வேலைகள் சென்ற பெப்ரவரி 3ம் நாள் (77—02—03) வன்னி மாநகரில் தமிழ் மரபு முறைப்படி சுபநேரம் நண்பகல் 12.00 மணிக்குதமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களால் தொடக்கிவைக்கப்பட்டது.

முன்னதாக திரு. அமிர்தலிங்கம் அவர்களும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் கட்டடவேலைகளை ஆரம்பிக்க வருகை தந்தபோது முறையே திரு. ஆ. கந்தையா, திருமதி சிவபாக்கியம் சிவசுப்பிரமணியம் ஆகியோரால் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து தலைவர் திரு. க. சோதிலிங்கம் அங்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். அவர் தமதுரையில், "சங்கத்திற்கென ஒரு தலைமைச் செயலகம் வேண்டுமென்று நாமெல்லாம் சிந்தித்த வேளை கட்டடம் எங்கு அமையவேண்டும் என்பதில் பலர் பல கருத்துக்களை வலியுறுத்தினர். யாழ்ப்பாணத்திலென்றும், மட்டுநகரிலென்றும், திருமலையில் என்றும் பலவித அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்ட போது,—இல்லை அது வவுனியாவிற்றான் அமையவேண்டுமென்று நீண்ட நோக்கோடு ஆணித்தரமாக அன்று நிருவாகத்தில் இருந்தவர்கள் வற்புறுத்தி தகுந்த காரணங்களை முன் வைத்துத் திட்டம் தீட்டினர். அவர்களின் தொலை நோக்கு எத்தனை பல நல்ல குறிக்கோள்களைக் கொண்டிருந்தன என்பது தற்போது எம்மில் பலருக்குத் தெளிவாகத் தெரியக்கூடியதாகவுள்ளது. எமது உறுப்பினர்கட்கு மட்டுமல்ல முழுத் தமிழினத்திற்குமே மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகிய வன்னித் திருநகரிலே எமது தலைமைச் செயலகம் அமையவிருக்கின்றமை எமக்குப் பெருமை தரக்கூடிய விடயமாகும். வேலைகளைத் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தொடக்கி வைக்கவிருப்பது அதனை விடப் பெருமைப்படக் கூடிய விடயம். திரு. அமிர்தலிங்கம் அவர்கட்கும் எமது சங்கத்திற்குமுள்ள தொடர்பு சங்க ஆரம்ப காலம் முதல் உள்ளது. அது தந்தை—மைந்தன் உறவு. இடருற்ற வேளைகளிலெல்லாம் உள விருப்போடு உதவி, ஊக்கம் தந்த அன்னார் சங்க வரலாற்றில் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய இந் நிகழ்ச்சியின் நாயகனாக இருப்பது எமக்குப் பேருவகையை அளிக்கின்றது."

"அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகும். உறுப்பினர்களின் நலன்களைக் கவனித்துவரும் அதே வேளை தமிழ் பேசும் மக்களின் எழுச்சித் தாகத்திற்குத் தொடர்ந்து வலுவூட்டி வந்துள்ளது — இனிமேலும் அவ்வாறே செயற்படும் எனவே சங்கத்தின் வளர்ச்சியிலும் உறுப்பினர்கள் மட்டுமல்ல முழுத் தமிழ் பேசும் இனமுமே அதிக அக்கறை கொள்ளவேண்டும்." என்றார்.



கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்து நாவலர் அ. அமிர்தலிங்கம் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அடுத்து இடமிருந்து வலமாக தலைவர் திரு. க. சோதிலிங்கம், படவரைஞர் திரு. நடராசா, திரு. சி. இரத்தினவடிவேல், திரு. இ. பேரின்பநாயகம், திரு. த. கந்தையா, திரு. கி. சதாசிவம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

அடுத்து உரையாற்றிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் வவுனியா மாவட்டப் பிரதிநிதி திரு. பி. மருதப்பிள்ளை அவர்கள், "இன்றைய இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தமிழ் மக்கள் இங்கு ஒருமித்து ஒன்றாக வாழ்கிறார்கள். தமிழ் பேசுமினத்திற்கெனவுள்ள தொழிற் சங்கமொன்று இங்கு பணியகம் அமைப்பது சாலவும் பொருத்தமானதே. கட்டட வேலைகள் செவ்வனே நிறைவு பெற வேண்டிய உதவிகளை நாம் எம்மியல்புக்கேற்ப செய்வதற்குகாத்திருக்கின்றோம்" என்றார்.

கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்து நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றினார். அவர் தமதுரையில், "1961ம் ஆண்டு சிங்கள அரசை எதிர்த்து தமிழ் மக்கள் எல்லோரும் சத்தியாக்கிரகம் செய்த வேளையிலே எம்மை ஹோமகமவில் உள்ள தடுப்பு முகாமில் கைதிகளாக்கினார்கள். சிங்களம் மட்டும் சட்டம் படிப்படியாக தமிழ் அரச ஊழியர்களைப் பழி வாங்கிவந்த காலம் அது. அந்தச் சமயத்திற்றான் தமிழ் அரசாங்க ஊழியர்கட்கென தனியான ஒரு தொழிற் சங்கத்தின் அவசியம் பற்றி ஆலோசிக்கப்பட்டது. சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டிருந்த சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்கள் எம்முடன் சிறையில் வைத்து ஆலோசனை செய்தார்கள். அவ் ஆலோசனையின் இறுதி விளைவே இன்று இந்த மண்ணில் தன் தலைமைச் செயலகத்தைக் கம்பீரமாகத் தோற்றுவிக்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமாகும்."

"தமது உறுப்பினர்கட்கு மட்டும் விடிவு தேடிக் கொடுப்பதே நோக்கம் என்ற குறுகிய அடிப்படையில் சங்கம் செயற்படவில்லை. தமிழ்த் தேசியஇனம் விடிவு பெறும்போதுதான் தமிழ் அரசாங்க ஊழியர்க்கும் விடிவு கிடைக்கும் என்பதனை உணர்ந்து அதற்காகச் செயற்பட்டுவரும் சங்கத்தினர் பாராட்டப்படவேண்டியவர்களே. இந்நாட்டின் தமிழ் பேசும் இனத்திற்கு நெருக்கடி வந்திட்ட போதெல்லாம் எமது இயக்கத்தவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்துள்ளார்கள் — இன்னும் உழைத்து வருகின்றார்கள். தமிழ் மக்களிடையேயுள்ள அத்தகைய சங்கம் இன்று தனக்கென ஓர் தலைமைச் செயலகத்தினை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளது எமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது. தலைமைச் செயலகத்தை வீரஞ் செறிந்த இவ் வன்னி மண்ணில் நிறுவுவதற்கும் இவர்கள் பல பின்னணிக் காரணங்களைவைத்துள்ளார்கள். இத்தகைய நல்ல பல நோக்கங்களோடு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியின் வெற்றி ஈழம் வாழ் முழுத் தமிழ் பேசும் இனத்திற்குமே பெரிதும் பயன் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே இந் நன் முயற்சி வெற்றிபெற எல்லோரும்—குறிப்பாக வன்னி

(4-ம் பக்கம் பார்க்க)

மூதறிஞர்

## சா. ஜே. வே. செல்வநாயகம் 80வது வயதையடைகின்றார்

தமிழீழத்தின் சிற்பியும், முப்பத்தைந்து லட்சம் தமிழத் தேசிய இனத்தின் தன்னிகரற்ற தலைவருமான தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் நா. உ., கியூ. ஸி. அவர்கள் 31—3—77 அன்று 80வது வயதில் அடியெடுத்து வைக்கின்றார். 1619ம் ஆண்டு தமிழ் மன்னன் சங்கிலியனின் ஆட்சி போரிலே போர்த்துக்கீசரினால் கைப்பற்றப்பட்ட பின்னர் சுமார் 350 ஆண்டுகள் அடிமையாக வாழ்ந்த தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு வித்திட்டு அந்தப் புனித லட்சியத்திற்காக கடந்த முப்பது ஆண்டுகளாகத் தார்மீகப் போராட்டம் நடத்தி வரும் தானைத் தலைவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து



தமிழர் விடுதலையின் பூரணத்தை காண தமிழ் எழுதுவினைஞர்கள் பிரார்த்திக்கின்றனர்.

# எழுச்சி

## நினைவு கூருகிறேம்!

பட்ட காலிலே படும் என்பது பழமொழி. தமிழ் அரசியல் வானில் சுடர் விட்டுப் பிரகாசித்த மேதை திரு. மு. திருச்செல்வத்தை சில மாதங்கட்கு முன்பு தான் பறி கொடுத்தோம் அத் துயர் ஆறவில்லை. அடுத்த மேதையையும் இழந்து ஆருத்துயரில் இருக்கின்றேம். தனது நுண் அறிவால் சட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் தொட்டு மாற்றுனையும் மலைக்கவைத்த அந்தச் சட்ட மேதையை, தமிழர் பலத்தை, பொன்னம்பலத்தை இழந்து விட்டோம்.

ஒற்றை ஆட்சிச் சோல்பரி அரசியல் அமைப்பை எதிர்த்து,தமிழனின் உரிமையைக்காக்க தன்திறமையை சொல்வன்மையைக் காட்டிப் போரிட்ட அந்தப் பொன்னம்பலம் இன்று எம் இனத்தை இக்கட்டான நிலையில் விட்டுப் பிரிந்துவிட்டார். 'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று முழக்கமிட்டு தமிழர் உள்ளங்களில் தமிழுணர்வைத் தூண்டிய அந்தத் தூண்டுகோல் இன்று கைதவறிவிட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானமே தமிழன் தலை நிமிர்ந்து வாழ உள்ள ஒரே வழி என்பதை ஏற்றுக் கொண்டு தமிழ்த் தலைவர்களுக்கெதிரான "ரயல்—அட்பார்" வழக்கில் தன் உடல் நிலையையும் பொருட்படுத்தாது தமிழன் திறமையைத் தன் சட்ட நிபுணத்துவத்தால், தமிழ்த் தலைவர்கள் செய்தது தப்பல்ல என்பதை ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பை வைத்தே வாதிட்ட சொல்வேந்தான் ஜீ. ஜீ. பொன்னம்பலம் இன்று தமிழ் இனத்தின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டின் அவர் தனது இறுதிக்காலத்தில் என்ன கொள்கையை ஏற்று உழைத்தாரோ அதை நிறைவேற்றத் தமிழ்த் தொழிலாளிகளான நாமும் முன் நின்று உழைப்போமாக!

அன்னாரின் நாமம் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் இறுதிவரை நின்று நிலைக்குமாக!

## தலைமைச் செயலகம் அமைத்திடுவோம்!

ஆழ்ந்த சிந்தனை கொண்ட எமது பெரியோர், பண்டாரவன்னியன் ஆண்ட பழம் பெரும் தமிழ் மண்ணில் எமது பணிமனையை அமைக்கத்திட்டமிட்டார்கள். அப்பணிமனை அங்கு செயலுருவம் பெற்று வருகின்றது. தமிழ் இனத்தின் எதிர்கால நிகழ்ச்சிகளில் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கவிருக்கும் இப் பணிமனை இரண்டு மாடிகளைக் கொண்டு ஐந்து மாத காலத்துள் அமைத்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எமது இந்த இலக்கு ஈடேறக் குறிப்பாகத் தமிழ் அரசாங்க எழுது வினைஞர்களதும் பொதுவாக அனைத்துத் தமிழ் மக்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

கட்டட வேலைகளுக்கு வேண்டிய பெருந்தொகையான இப்பணம் எமது கையில் இல்லை என்பது அங்கத்தவர்கட்குத் தெரியும். கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தீர்மானப்படி அங்கத்தினர் பெரும்பான்மையோர் தமது சம்பளத்திலிருந்து கட்டட நிதிக்காக ஒரு ரூபா வீதம் தந்து கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் ஓர் கணிசமான தொகையையே நாம் பெற முடிகிறது. எனவே நல்லதொரு இலட்சிய நோக்குடன் அமைக்கப் பட்டுவரும் இக்கட்டடம் சிறப்புறக் குறிப்பிட்ட கால அளவுள் அமைத்து முடிக்க இன்னும் அதிக அளவில் பணம் தேவைப்படுகிறது. இன்றைய பொருளாதார நெருக்கடி எமக்குப் புரிகிறது. ஆனல் சிறிய துன்பம் எதிர்காலத்தில் பேரின்பமாகப் பரிணமிக்கப் போகிறது என்பதுடன் நல்ல இலட்சிய நோக்கிற்காக உதவுங்கள்!

உங்களுக்காக உதவுங்கள்!!

உங்கள் இனத்திற்காக உதவுங்கள்!!

அள்ளிக் கொடுங்கள் அன்போடு பெறுகிறேம் மனக் கண்ணில் உள்ளதை வன்னிய மண்ணில் காண்போம்.

# வேலை நிறுத்தம் பிசுபிசுத்ததற்கு இனவாதப் போக்கே காரணம்!

## அலி சங்கம் உண்மையை உணர்ந்தது!

## தமிழ்த் தொழிலாளியின் ஒற்றுமைமேலோங்கியது

சென்ற ஜனவரியில் நடந்து முடிந்த ஏனைய எழுதுவினைஞர் சங்கங்களின் வேலைநிறுத்தம் ஆட்டம் கண்டதற்கு சிங்களத் தொழிற் சங்கங்களிடையே, காணப்பட்ட இனவாதப் போக்கும், ஒற்றுமையின்மையுமே முக்கிய காரணமாகும். தமிழ்த்தொழிலாளியின் ஒத்துழைப்பின்றி எதையும் சாதிக்க முடியாதென்பதை இன்று 'அலி' சங்கமும் ஏனைய சிங்களச் சங்கங்களும் அனுபவரீதியில் உணர்ந்து கொண்டிருக்கின்றன.

மிரட்டி எம்மை அடிபணிய வைக்கலாமென்ற அலி' சங்கத்தின் ஜம்பம்' எம்மிடம் வாய்க்கவில்லை. சிங்களச் சங்கங்கள் கடைப்பிடிக்கும் இனவாதப் போக்கு வேலை நிறுத்த காலங்களில் அப்பட்டமாகத் தெரிந்தது. வேலைக்குச் சென்ற தமிழ ஊழியர்களை 'பற தெமள பங்கவேவா', 'ஹொறிகடை தெமளா' போன்ற இனத்துவேச வார்த்தைகளால் இவர்கள் திட்டினர்கள். வேலைக்குச் சென்ருல் தமிழரைக் கொல்லுவோம் என்றெல்லாம் அச்சுறுத்தினர். வேலை நிறுத்தத்தில் பங்குபற்றுமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினரையும் கேட்டாலென்ன என எமது கொள்கையை அறியாத வெகுளிகள் சிலர் கேட்டபோது, 'கேட்கத் தேவையில்லை. அதற்கு எம்மிடம் விசேட மருந்து இருக்கிறது' என்ருர்களாம். அந்த மருந்துதான் மேற்கண்ட இனத்துவேச மிரட்டல்கள் எம்மவரிடம்வாய்க்கவில்லை.


நாமும் சக தொழிலாளர்களெனக் கருதியிருப்பின் எமது கோரிக்கையையும் பொது வேலைத்திட்டத்தில் சேர்த்திருக்கலாம். மறுத்துவிட்டார்கள்-பிடிவாதமாக. தொழிலாளர் கோரிக்கையைத் தொழிலாளர்களால் ஏற்க முடியாது. பின் அரசாங்கத்துடன் தமது கோரிக்கைக்காகப் போராட முன்வர வேண்டுமாம். சிங்களத் தேர்ச்சியின்றி வேலையிழந்தும், வேலை இழக்கும் ஆபத்தையும் எதிர்நோக்கும் நூற்றுக் கணக்கான தமிழ்த் தொழிலாளிகள் அவர்களது சக தோழர்களில்லை — அவர்களின் 'வர்க்க ஒற்றுமை'ச் சித்தாந்தப்படி. இவர்கள் படு துவேசிகள்; இனவாதக் கும்பல்கள்; 'வர்க்க ஒற்றுமை' பேசும் வகுப்புவாதிகள்.

ஆயினும், தொழிலாள வேலை நிறுத்தத்தில், தொழிலாளர் குரலை நசுக்க ஆட்சியினர் மேற்கொண்ட அடக்கு முறையையும் எதேச்சையான போக்கையும் சங்கம் வன்மையாகக் கண்டித்துப் பிரதமருக்கு ஆட்சேபனை தெரிவித்திருந்ததுடன் எமது தார்மீக ஆதரவையும் தமிழ்த் தொழிலாளர் என்ற ரீதியில் நல்கியிருந்தோம். ஆனல் இனவாதப் போக்கிற்கு அடிபணிய மறுத்து வேலை நிறுத்தத்தில் நேரடியாகக் குதிக்காது ஒதுங்கிக்கொண்டோம். எமது இந்த முடிவை எமது அங்கத்திலர் வெகுவாக பாராட்டியிருந்தமை குறிபபிடத்தக்கது.

## "செல்லப்பா" அகால மறைவு

சங்கத்தின் மூத்த, உறுப்பினரும் தமிழ்ப் பற்றும் துடிப்பும் மிகுந்தவருமான திரு. த. செல்லப்பா அவர்கள் சென்ற 30—11—76ல் காலமானர். இறக்கும் போது அன்னர் திருமலை, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் கடமை புரிந்துவந்தார்.

1964ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் முழு இயக்கத்திற்கு வந்தபோது தனித் தமிழில் கைச்சாத்திட முன் வந்தார் திரு. செல்லப்பா. அவர் மீது சிங்கள வெறியர்கள் தமது காடைத் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். அப்போது இவரின் திணைக்களத் தலைவராகிய நில அளவை அதிபர் இதற்கு மறைமுகமாக உடந்தையாக விருந்தார். இதற்கெதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது அங்கும் அவருக்குப் பல இடையூறுகள். தொடர்ந்து இடமாற்றம், சம்பள உயர்வு நிறுத்தம் இப்படி அடுக்கடுக்காகப் பல தொல்லைகளை தைரியத்துடன் எதிர் நோக்கினர். இவைபற்றியெல்லாம் ஆவணி—புரட்டாதி 1966 'எழுச்சி' இதழ் அடுக்காகச் செய்திகள் வெளியிட்டிருந்தது. சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு, தினகரன் ஆகிய நாளேடுகளில் செய்திகள் வெளியாகின. வழமை போல் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் விரைந்து வந்து இதுபற்றி பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டு சங்கத்தின் சார்பில் வேண்டிய உதவிகள் வழங்கினர்.



இப்படியாக ஒன்று மாறி ஒன்ருக தொல்லைகளை ஆளுமினத்தினர் கொடுத்திட்ட போதும் கொண்ட கொள்கையில் இறுதிவரை விடாப்பிடியாக இருந்த அந்தச் செல்லப்பா இன்று நம்மிடையே இல்லை. "செல்வம்" என்ற புனை பெயரில் 'எழுச்சி'க்கு கவிதைகள் எழுதிவந்த செல்லப்பா மறைந்து விட்டார். தீரமும் தமிழ்ப் பற்றும் மிக்க ஒரு உறுப்பினரை சங்கம் இழந்து விட்டது. அன்னரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்குச் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## விபரம் தருக

இடமாற்றம் பெற்று புதிய அலுவலகங்களுக்குச் செல்லும் உறுப்பினர்கள் தாம் கடைமை ஏற்கும் புதிய அலுவலகம் பற்றிய விபரத்தை உடனுக்குடன் எமக்கு அனுப்பி வைக்கவும். இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற/வருகின்ற உறுப்பினர்களைப் பற்றிய விபரங்களை அவ்வப் பகுதியிலுள்ள கிளைச் செயலாளர்/தொடர்பு அலுவலர் எமக்கு உடனும் அறிவிக்கும்படி கேட்கப்படுகின்றனர். இது தொடர்பாக 8-2-77ல் பொதுச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்திற்குத் தங்கள் கவனம் வேண்டப்படுகின்றது.

இடையீடின்றி உறுப்புரிமை, சேமநலன்புரி திட்டம் ஆகியனவற்றிற்குரிய சந்தாத் தொகையினை அறவிடுதற்கு இவை அவசியம். உரிய முறையில் சந்தா அறவிடப்படாது விடின் சங்கச் சகாயங்களைப் பெறுவதில் உறுப்பினர்கள் அநாவசிய இடையூறுகளை எதிர் நோக்கநேரிடும்.

# ‘எமது போராட்டதிற்கு தொழிலாளர் உழைப்பு அவசியம்’

## -சங்க வரவேற்பில் காசி ஆனந்தன்.

“போராட்ட மொன்று உருவாகும்போது அங்கு எல்லா மக்களின் சேவையும் உழைப்பும் அத்தியாவசிய மானது. அங்கு முடவனுக் கும்வேலையுண்டு-முனிவனுக் கும் வேலையுண்டு. யுத்தகள வீரனுக்கு வாள் செய் தளிக்க கம்மாளன் சேவை அவசியம்; உணவளிக்க உழுது பயிரிடும் உழவன் பணி வேண்டும்; இவை யெல்லாவற்றையும் விட போராடும் தொழி லுக்கு தொழிலாள வீரர் வேண்டும்— விற்பன்னர்கள் வேண்டும். இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானவர்கள் வருந்தி உழைக்கும் சாதா ரண தொழிலாளர்களே. அத்தகைய தொழிலாளரில் ஒருபிரிவினரைப்பிரதிநிதித் துவப்படுத்தும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் எமது போராட்டங்களுக் கெல்லாம் பக்கபலமாக நின்றுழைப்பது எமக்கு உவகை அளிக்கின்றது. சாதாரண தொழிலாளர் களே எமது இலட்சிய நாட் டின் முடி சூடா மன்னர் கள்.” இவ்வாறு சிறை மீண்ட தமிழ்ச் செம்மல் களைக் கௌரவித்து சங்கம் அளித்த தேநீர் விருந்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்,“சிறை யில் இருப்பவர்கள் எல்லோ ருமே தியாகிகள் என்றோ அல்லது வெளியே இருப்ப வர்கள் எல்லோரும் போலிகள் என்றோ முடிவு கட்டிவிடக் கூடாது. சிறையிலிருந்த தலைவர்கள் துரோகிகளான வரலாற்றையோ அல்லது வெளியிருந்தோர் விளம்பர மின்றிச் செய்த சேவை களையோ நாம் மறந்துவிட முடியாது” என்றார்.

தலைமை வகித்து திரு. க. சோதிலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில், “சங்கம் தமிழ் இனத்தின் பிரிக்க முடியாத ஓர் உறுப்பு. எனவே இன மீட் சிக்காக நடைபெறும் எந்த வொரு போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள சங்கம் ஒருபோதும் தயங்க மாட்டாது” என்று குறிப் பிட்டார்.

பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் நன்றி தெரிவித்துப் பேசு கையில், “சிறைக்கும் எமது சங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. எமது சங்கம் ஆரம்பிக்கப் படுவது பற்றிக்கூட தலைவர் கள் சிறையில் இருக்கும் போதுதான் ஆலோசனை செய்தார்கள். இன்று தமி ழுக்குக் குரல் எழுப்பி சிறை சென்று மீண்டுள்ள இளைஞர் களுக்கு வரவேற்பளிக் கிறோம். தமிழ் பேசும் இனத்தின் தேசிய பிரச்சினை களில் எமது சங்கம் என் றுமே ஒதுங்கியிருந்ததில்லை. சிறைக்கூடத்தைத் துச்ச மென மதிக்கும் உங்கள் போன்ற தியாக உளங் கொண்ட இளைஞர்கள் ஆயிரமாயிரமாக எண்ணிக் கையில் உயரவேண்டும். அதுவே எமது விடிவுக்கு வழிவகுக்கும். உங்களுக்கு இங்கு இவ் உபசாரத்தை அளிக்க வாய்ப்புக்கிடைத் தமை எமக்கு பெருமை தருவதாகவுள்ளது.” என்றார்.

## “உமாபதி” காலமானார்

“உமாபதி” “உமாபதி” என்று தமிழ் மக்களால் அன்பொழுக அழைக்கப் பட்டு வந்த திரு. க. உமா பதிசிவன் சென்ற 28-2-77 அன்று காலமானார். விறல் வேங்கை போன்று வீரிய நெஞ்சம் கொண்ட ‘உமா பதி’ தன் இறுதிக் காலம் வரை தமிழினத்தின் விடு



தலைப் போராட்டங்கள் அனைத்திலும் களைப்போ சலிப்போ இன்றி தான் கொண்ட லட்சியத்திற்காக ஆற்றிய பணிகள் அனந்தம்.

எமது சங்க வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு அவ்வப்பொழுது ‘உமாபதி’ ஆற்றிய உதவிகளுக்கு நாம் என்றும் கடப்பாடுடை யோம். சென்ற ஆண்டு யாழ்நகரில் நடந்தேறிய எமது 15வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் பொழுது நாட்டின் நாற்புற மும் இருந்து வருகை தந் திருந்த எமது உறுப்பினர் களுக்கு உணவு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ‘உமா பதி’ அவர்கள் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர் களுக்கு வலக்கரமாக நின்று இரவு பகலாகச் செய்த உதவிகளை நாம் என்றும் மறப்பதற்கில்லை.


“உமாதி”யின் இறுதிக்கிரி யைகள் அவரது சொந்த ஊரான கருகம்பானையில் நடைபெற்ற பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி யின் செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் உடுவில் நா. உ. திரு. வி. தர்மலிங்கம், முன்னாள் செனட்டர் சு. நடராசா முதலான பல தமிழ் தலைவர் கள் கலந்து கொண்டனர். சங்கத்தின் சார்பாக எமது பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி யைச் செலுத்தினர். “உமா பதி”யின் இழப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அதன் சார்பு அமைப்புக் களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. அவரது மறைவினல் துயருறும் அவரது அன்பு மனையாளுக் கும், பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## சேமநலன்புரித் திட்டத்தில் சேர்ந்திடுவீர்! சேமங்கள் பலப் பல பெற்றிடுவீர்!!

1976 ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள சங்கத்தின் சேமநலன்புரித் திட்டத்தில் உறுப்பினர்கள் அதிக ஆர்வத்துடன் சேர்ந்துவருகின்றனர். நெருக்கடி உண்டாகும் காலங்களில் உதவுவதற்கென ஆரம்பிக்கப் பட்ட இத்திட்டத்தில் உறுப்புரிமை பெறுதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம் மாதம் ரூ. 1/- மட்டுமே. ஆனல் சகாயங்களோ அநேகம்.

* ஐந்து பிள்ளைகட்குப் பின் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ரூ. 100.00 நன்கொடை.
* உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து அவரின் பின் உரித்தாளருக்கு ரூ. 1000.00 நன்கொடை.
* உறுப்பினரின் தாரம் இறக்குமிடத்து ரூ. 500.00 நன் கொடை.
* திருமணமாகாத உறுப்பினரின் பெற்றாரொருவர் இறக்குமிடத்து ரூ. 500.00 நன்கொடை.
* உறுப்பினரின் பிள்ளை ஒன்று இறக்குமிடத்து ரூ. 200.00 நன்கொடை.

இத்தனை நன்கொடைகளும் மாதம் ஒரு ரூபா செலுத்தி இத்திட்டத்திற் சேரும் எல்லா உறுப்பினருக் கும் வழங்கப்படுகிறது. திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட காலத்தினுள்ளேயே பல உறுப்பினர்கள் நன்மை பெற்றுள்ளார்கள். எனவே இதுவரை உறுப்பினராகாத வர்கள் இன்றே உறுப்புரிமை பெறுங்கள்.



கட்டிடத்திற்கான வரைபடத்தை நாவலர் அமிர்தலிங்கம் அவர் கள் கட்டடக் கொந்தராத்துக்காரர் திரு. த. தம்பிராசா அவர் களிடம் ச்ம்பிரதாய முறைப்படி கையளிப்பதைக் காண்க.

## கட்டட நிதிக்காக நாடெங்கிலும் நிதியுதவி நிகழ்ச்சிகள்!

தலைமைச் செயலகக் கட்டடத்தைக் கட்டி முடிக்க மேலும் நிதி தேவைப்படுவதால், அதைச் சேகரிக்கும் பொருட்டு நாட்டின் பல பாகங்களிலும் நிதியுதவி நிகழ்ச்சிகளை நடாத்துவதென 12-3-77ல் கூடிய எமது செயற்குழு தீர்மானித்துள்ளது. இதன்படி வவுனியாவில் நாடக ங்களும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு. திருமலை ஆகிய இடங்களில் உதைபந்தாட்ட நிகழ்ச்சிகளும் நடை பெறவுள்ளன. அங்கத்தவர்களும், தமிழ்ச் சமுதாயமும் இந் நிகழ்ச்சிகட்குப் பேராதரவு தருவார்களாக!

## அனுப்பித்தரவும்

சங்கத்தின் 6வது (1966/1967) ஆண்டறிக் கையும் பொதுக் கூட்ட அறிவித்தலும் உறுப் பினர்கள் யாரிடமாவது இருப்பின் அதன் பிரதி யொன்றினைச் சங்கத் தேவைக்கு அப்னுபித் தருமாறு வேண்டு கிறோம்.

## வினைத்திறமை காண் தடைப் பரீட்சை வகுப்புக்கள் வகுப்பு II ‘அ’

ஏப்பிரல் மாதம் நடை பெறவிருக்கும் வினைத் திறமைகாண் தடைப் பரீட் சைக்கான பயிற்சி வகுப்புக் களில் கலந்துகொள்ள விரும்பும் உறுப்பினர்கள் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின் றனர்.

## 175பேர் Iம் வகுப்பிற்குப் பதவியுயர்வு

பொ. எ. சேவையின் Iம் வகுப்பிற்கு 175பேர் மொத்தமாகப் பதவியுயர்வு அளிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் இருபத்தை வரே தமிழ் பேசும் எழுது வினைஞர்களாவர் Iம் வகுப் புப் பதவியுயர்விற்குச் சிங் களத் தகமை கோரும் அர சாங்கத்தின் வகுப்புவாத நடவடிக்கையால் அநேக தமிழ் உறுப்பினர்கள் இம் முறையும் உயர்ச்சி மறுக் கப்பட்டுள்ளார்கள். அரசின் இப் போக்கிற்கு சங்கம் கடும் கண்டனம் தெரிவித் துள்ளது.

## சங்கத்தின் தந்தி முகவரி

சங்கத்தின் தந்தி முகவரி யாக ‘எழுசங்கம்’ எனும் பதம் பிரதம தந்தி மா அதி பதியால் அங்கீகரிக்கப்பட் டுள்ளது. என்பதை உறுப் பினர் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். தந்தி மூலம் தொடர்புகொள்ளுப வர்கள் இவ் வசதியைப் பயன்படுத்திக்கொள்ளு மாறு வேண்டப்படுகின்ற னர்.

## சேமநலன்புரித் திட்டத்தின்கீழ் முதலாவது நன்கொடை

### திரு. செ. இராமகிருஷ்ணன் பெறுகிறார்

1976ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட சேமநலன்புரித் திட்டத்தின் கீழான முதலாவது நன் கொடை நிந்தாவூர், உதவி அரசாங்க அதிபர் அலுவல கத்திற் பணிபுரியும் உறுப்பினர் திரு. செ. இராமகிருஷ் ணன் அவர்கட்கு சென்ற 31—01—77ல் வழங்கப்பட்டது. திருமணமாகாத இவ் உறுப்பினரின் தாயாரின் இறப்பை முன்னிட்டே இவ் உதவுதொகை அன்னருக்கு வழங்கப் பட்டுள்ளது.

### மேலும் பலர் விண்ணப்பம்

எமக்குக் கிடைத்துள்ள ஏனைய விண்ணப்பங்கள் பரி சீலிக்கப்பட்டு சகாயங்கள் வழங்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்கு இடமாற்றச் சபையில் பிரதிநிதித்துவம்

## ஓராண்டுக்கு மேலாக சங்கம் நடாத்திய தீவிர போராட்டம் பூரண வெற்றியளித்தது!!

இடமாற்றச் சபையில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதெனத் தாம் தீர்மானித்துள்ளதாகப் பொது நிருவாக அமைச்சு அறிவித்துள்ளது. அரசின் இம் முடிவினைபொதுநிருவாக அமைச்சு எழுத்து மூலம் சங்கத்திற்கு அறிவித்துள்ளது. இதன்படி பொது எழுதுவினைஞர் சேவைக்கான சகல இடமாற்றச் சபைகளிலும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்குப் பூரண அந்தஸ்துடன் கூடிய பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. இனிமேல் நடைபெறவிருக்கும் எல்லா இடமாற்றச் சபைகளிலும் சங்கம் உத்தியோக பூர்வமாகக் கலந்துகொள்ள இம் முடிவு வழிவகுத்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக சங்கம் கடந்த ஓராண்டிற்கும் மேலாக பொது நிருவாக உண்ணுட்டலுவல்கள் அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவுடன் தொடர்புகொண்டு இடைவிடாத போராட்டம் நடாத்தி வந்தது. 1976—08—23ல் இறுதியாக பொதுச் செயலாளர்ப் திரு. இ. பேரின்பநாயகம் அனுப்பிவைத்திருந்த உண்மைகள் பல பொதிந்த நீண்ட மகஜரின் முழு விபரமும் ஆக—செப். 76 'எழுச்சி' இதழில் வெளியாகியிருந்தமை ஞாபகமிருக்கலாம். அதனைத் தொடர்ந்து தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணித் தலைவர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களும் அமைச்சருடன் தொடர்பு கொண்டிருந்தார். விடயம் மீண்டும் 1976 — 10 — 12ம் நாள் தேசிய அரசுப் பேரவையில் ஊர்காவற்றுறை நா. உ. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களால் எழுப்பப்பட்டது.

இவை தவிர சங்கம் கடிதமூலமும் நேரிலும் பல தடவைகள் வெவ்வேறு அமைச்சுஅதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு இடமாற்றச் சபையில் எமக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டியதன் அவசியத்திற்கான காரணங்களையும் நியாயத்தையும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் முன் வைத்தது. அநியாயமாக உறுப்பினர்கள் பழிவாங்கப்பட்டமையும், தகுதியற்றவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமையும்சுட்டிக்காட்டப்பட்டது. தொழிற் சங்க சர்வாதிகாரமும், ஜனநாயக விரோதச் செய்கைகளும் தெளிவாக எடுத்து விளக்கப்பட்டன.

எமது பக்கம் நியாயமிருப்பது உணரப் பட்டபோதும் 'நந்திகள்' பல நியாயத்திற்குக் குறுக்கே வழி மறித்து நின்றன குறிப்பாக 'அலி' சங்கம் இறுதிவரை இதனைத் தடுப்பதற்குப் பல வழிகளில் மட்டரகமான முயற்சிகளை மேற்கொண்டது. தனது (தமிழ் ஊழியர்க்கு உதவி செய்வதாகப் பாசாங்கு பண்ணும்) போலி வேடம் கலைக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காகத் தான் எத்தனை தில்லுமுல்லுகள். எமது போராட்ட வேகத்தில் இவர்களின் சூழ்ச்சிகள் தகர்த்தெறியப்பட்டு தவிடு பொடியாக்கப்பட்டன. எமது வெற்றி எமது தனித்துவத்தில் மட்டுமே உண்டு என்பது மீண்டுமொருமுறை நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

சங்கத்தின் கோரிக்கையின் வெற்றிக்காகப் பல வழிகளிலும் எமக்குப் பக்கபலமாக நின்று துணை புரிந்த சகலருக்கும் இவ் வேளை நாம் நன்றி கூறவேண்டியவர்களாகிறோம். குறிப்பாக மூதறிஞர் தந்தை செல்வா, அமரர் மு. திருச்செல்வம், கியூ. ஸி. திரு. சே. மா. செல்லத்தம்பு, நா. உ, பிரபல தொழிற் சங்க வாதி திரு. கே.சி. நித்தியானந்தா திரு. கா. பொ. இரத்தினம் நா. உ. ஆகியோர்கட்கு சங்கம் என்றென்றும் நன்றியுடைத்து.

---

## புத்தெழில்...

(1ம் பக்கம் பார்க்க)

மக்கள் தமது பூரண ஆதரவை நல்கவேண்டும். எதுவித வேறுபாடுமின்றி உவகையுடன் இங்கு பலவேறு தரப்பட்ட மக்கள் வருகை தந்திருப்பதனை நோக்கும்போது இந்திருமாண வேலைகள் துரித கெதியில் நிறைவுறும் என்ற நம்பிக்கை வலுவுறுகிறது. அதற்கு எனது "நல் வாழ்த்துக்களைத்" தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

தலைமைச் செயலகத் தொடர்பு அலுவலர் திரு. ஆ. கந்தையா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியாக பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் நன்றியுரை கூறும் போது, "வவுனியாவில் தலைமைச் செயலகம் நிறுவப்படுதல் பற்றி பல ஆண்டுகாலமாக திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டபோதும் சரியான முறையில்வேலைகள்தொடக்கப்படுவதற்கு இப்போது தான் தருணம் வாய்த்துள்ளது. குறுகிய கால அறிவித்தலுடன் பல வேலைப் பளுவுக்கும் மத்தியில் எமது வேண்டுகோளை ஏற்று இவ் வேலைகளை ஆரம்பித்துவைத்தமைக்காக திரு. அமிர்தலிங்கம் அவர்கட்கும் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கட்கும் நாம் மிகுந்த கடமைப்பாடுடையோம். சங்கத்தின் வளர்ச்சியில் கொண்டிருக்கும் அவரின் அளவு கடந்த ஆர்வம் எமக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சி அளிப்பதாகவுள்ளது. ஆடம்பரமெதுவுமின்றி அமைந்தஇவ் விழாவில் கலந்துகொண்ட சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்றார்.

விழாவில் நிதிச் செயலாளர் திரு. கி. சதாசிவம், இணைச் செயலாளர் திரு. சி. இரத்தின வடிவேல், அனுராதபுரப் பிரதிநிதி திரு. வீ. நாகநாதன் உட்பட பல உறுப்பினர்களும் வர்த்தகர்களான திரு. வி. ரி. சுப்பிரமணியம், திரு. சு. நவரத்தினம், திரு. தேவராசா முதலியோர் உட்பட வவுனியா நகரின் முக்கிய பிரமுகர்கள் பலரும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## ஜீ. ஜீ...

(1ம்-பக்கம் பார்க்க)

புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அன்னருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக திரளான மக்கள் அவரின் கொழும்பு வாசஸ்தலத்திற்கு வருகை தந்த வண்ணமிருந்தனர்.

ஏனைய தமிழ்த் தலைவர்கள் தமிழர் தலைவன் தந்தை செல்வா, ஸ்ரீலங்காக் குடியரசின் சனுதிபதி பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஏனைய பிரமுகர்களும் தமது அஞ்சலியைச் செலுத்த வருகை தந்திருந்தனர். எமது சங்கத்தின் தலைவர்' செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் ஏனைய உறுப்பினர்களுடன் மலர் வளையம் சாத்தி சங்கத்தின் சார்பில் அஞ்சலியைச் செலுத்திக்கொண்டனர். முன்னதாக அமரரின் பூதவுடலைபெற்றுக்கொள்ள செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலயத்திற்கும் சென்றிருந்தார்.

அமரரின் பூதவுடல் 12. 2. 77 அன்று விசேட விமானம் மூலம் யாழ் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணிமனையிலும் அதனைத் தொடர்ந்து வீரசிங்கம் மண்டபத்திலும் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது சாரை சாரையாக சென்று மக்கள் கூட்டம் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தியது. சங்கத்தின் யாழ். கிளையினர் இவ் அஞ்சலி நிகழ்ச்சிகளில் பெருமளவில் கலந்துகொண்டனர். இதனையொட்டி "ஆத்ம சாந்தி" என்ற தலைப்பிட்ட அஞ்சலித் துண்டுப் பிரசுரமொன்றையும் யாழ். கிளை அச்சிட்டு வெளியிட்டிருந்தது. அதில் வெளியாகியிருந்த திரு. சந்திரா ஸ்ரீபதி யாத்த இரங்கற்பாக்கள் கண்களைக் குளமாக்கின.

மறு நாள் மக்கள் புடைசூழ அமரரின் பூதவுடல் தகனக் கிரியைகட்காக அன்னரின் பிறப்பிடமான பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வழி நெடுக பாதையின் இருமருங்கிலும் நின்று பொது மக்கள் தமது மறைந்த தலைவனுக்கு இறுதி அஞ்சலியை செலுத்திக்கொண்டிருந்தனர். வழிஎங்கும் தோரணங்களும் கறுப்புக் கொடிகளுமே காணப்பட்டன மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை நகரை அடைந்தபோது ஊர் வழமைப்படி பறை மேளங்கள் வானதிர முழங்க பூதவுடலைச் சுமந்துவந்த ஊர்தி ஊர்வலமாக கடற் கரை மைதானத்துக்கு இட்டுச் செல்லப்பட்டது.

கடற்கரை மைதானத்தில் "உயிர் தமிழுக்கு உடல் தீயுக்கு" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சிதைமீது பூதவுடல் வைக்கப்பட்டபோது ஆதவன் துயர் தாங்காது மறைந்துவிட்டான். மைந்தன் குமார் பொன்னம்பலம் சிதைக்குத் தீமூட்டிய போது கூடியிருந்த மக்கள் 'ஓ' எனக் கதறியழுதனர். கடல் அலைகள் கரைக்கு வரவில்லை. ஆருத்துயரால் அழுதழுது அவை ஓய்ந்துவிட்டன. அமரரின் புகழுடல் தீயுடன் சங்கமமாகியது.

யாழ்ப்பாணத்திலும் பருத்தித்துறையிலும் நடைபெற்ற அமரரின் இறுதிக் கிரியைகளில் தாய்ச் சங்கத்தின் பிரதிநிதிகளாக இணைச் செயலாளர் திரு. சி. இரத்தினவடிவேல், துணை நிதிச் செயலாளர் திரு. ந. சிவரஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கு தமிழிலேயே நேர்முகப் பரீட்சை நடத்தவேண்டும்

"நிருவாக சேவைப் பரீட்சை, கணக்காளர் பரீட்சை, பொ. எ. சே. அதிசிறப்பு வகுப்புப் பரீட்சை ஆகியனவற்றிற்குத் தோற்றும் தமிழ் மொழி மூலம் பொது எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் தமிழ் மொழியிலேயே நடாத்தப்படவேண்டும்." இவ்வாறு பொது நிருவாக அமைச்சின் செயலாளரிடம், பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி பதவியுயர்வுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் தமிழ் மொழிமூலப் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்பட்டு வருவது பற்றி ஆட்சேபம் தெரிவித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் மேற்கண்ட கோரிக்கையினை விடுத்துள்ளார்.

இக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது — "இவ் அலுவலர்கள் சேவையில் சேரும்போது தமிழ் மட்டுமே தெரிந்தவர்களாவர். ஒரு வேளை சிங்களப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினுங்கூட நேர்முகப் பரீட்சையொன்றில் தமது திறமையை வெளிக்காட்டக் கூடியளவு அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனவே தமிழ் தவிர்ந்த ஏனைய மொழி அறிவை இவர்களிடம் அதிகாரிகள் சிறிதளவேனும் எதிர் பார்க்கக் கூடாது. இதனுல் ஏனைய சக சிங்கள அலுவலர்களுடன் ஒப்பிடும்போது இவர்கள் மிகவும்பாதகமான நிலையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது ஓர் பாரபட்சநடவடிக்கையாகும். எனவே எதிர்காலத்தில் மேற்குறித்த பரீட்சைகளில் தேறி நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெறும் தமிழ் மூலப் பரீட்சார்த்திகள் யாவரும் நேர்முகப் பரீட்சையின் போதும் தமிழ் மொழி மூலமே பரீட்சிக்கப்படவேண்டும்."

## திருமலையில் இலவச வகுப்புக்கள்!

அ. எ. சங்கத்தின் திருமலைக் கிளையினுல் 1976 பெப்ரவரி மாதம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொ. எ. சே. வகுப்பு II 'அ' பிரிவிற்கான பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புக்கள் சென்ற நவம்பர் மாதத்துடன் முடிவுற்றன. இவற்றுடன் சென்ற ஆண்டில் நடைபெற்ற வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான வகுப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

வகுப்புக்களில் இலவசமாக விரிவுரைகளாற்றிய திருவாளர்கள் S. பாஸ்கரதாஸ் (மாவட்ட காணி அலுவலர்—மன்னர்) வ. ஸ்ரீஸ்கந்தவேல் (உதவிக் கணக்காளர்) எஸ். சோமஸ்கந்தசர்மா, எஸ். ஏகாம்பரம்' ஏ. பி. பிகுருடோ, எஸ். கே. செல்லையா ஆகியோருக்கு சங்கம் என்றும் கடப்பாடுடைத்து.

எதிர்வரும் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குரிய வகுப்புக்களை தொடர்ந்து திரு. எஸ். ஏகாம்பரம் (அரச கட்டற்படை) அவர்கள் நடாத்தவுள்ளார். பயில விரும்புபவர்கள் திருமலைக் கிளைச் சங்கத்துடன் அல்லது தாய்ச் சங்கப் பிரதிநிதி திரு. அ. சிங்காரராயர் (கச்சேரி, திருகோணமலை) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

---

இச் செய்தித்தாள் 676, காலி வீதி கொள்ளுப்பிட்டியிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினருக்காக 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12 இல் இருக்கும் சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு மேற்படி சங்கத்தினரால் வெளியிடப்பட்டது.